**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 119/2009**
**U/s. 120(b),465,466,468,471,420 IPC r/w 511 IPC**
**PROSECUTION WITNESS NO. 10 (LW. 13)**

| | |
|---|---|
| **Name** : திரு. பத்மநாபன் | |
| **Father's/Husband Name :** | **Occupation** : |
| **Address** : | **Age** : /2025 |

**2** எதிரி ஆஜர். **3** வது எதிரி ஆஜர் இல்லை. **355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா , நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No.119 /2009 13.10.2025 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.55**

**முதல் விசாரணை:**

நான் தற்போது DSP ஆக பணியில் இருந்து கடந்த 2010 வருடம் ஓய்வு பெற்றுவிட்டேன். நான் 2007ம் வருடம் பிப்ரவரி மாதம் மாவட்ட குற்றபிரிவில் பணியில் இருந்தபோது 13.02.2007 ம் தேதி மாவட்ட குற்றபிரிவு எண் 140/2006 எனது விசாரணைக்கு எடுத்துகொண்டு பட்டியல் கண்ட சாட்சிகளான பிரேமகுமாரி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எனக்கு பணி மாறுதல் காரணமாக வழக்கு ஆவணங்களை புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்து விட்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

மாவட்ட ஆட்சியர் அலுவகத்தில் இஸ்மாயில் என்ற அதிகாரி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் அதிகாரியாக இருந்தாரா என்று விசாரித்தேனா என்றால் இல்லை. என்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து குறிப்பிட்ட ஆவணங்கள் வழங்கப்பட்டதா என்று பட்டியல் கண்ட சாட்சியை நான் விசாரித்தேன் . போலியான சான்று எந்த அலுவலகரால் வழங்கப்பட்டது என்று நான் எதுவும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு குறிப்பிட்ட துறையை பொறுத்து நகல்கள் கேட்டால் அந்த குறிப்பிட்ட துறை தலைமை அலுவலரே சான்று வழங்காலாமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்களது அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டதா எனவும், மாவட்ட ஆட்சியர் தஞ்சாவூர் என்ற பதவி சீல்லின் மேல் போடப்பட்ட கையொப்பம் உண்மை என தெரிந்து கொள்ள சாட்சியை எவரேனும் விசாரித்தேனா என்றால் எங்கள் அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்டது இல்லை என பசா4 அவரது வாக்குமூலத்தில்

கூறியுள்ளார். அது சம்மந்தமாக பசா4 யை தவிர வேறு சாட்சிகள் எவரேனும் விசாரித்தேனா என்றால் இல்லை.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்-** S.T. **கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.